அமைத்தால் தான் அங்கே மருத்துவ மனையை மாற்றுவதற்கு மக்களால் வரவேற்கப்படும். அதற்கு அந்தந்த வட்டார மக்களுடைய பெரும் உதவி—நன்கொடை—இருந்தால்தான் அரசாங்கம் ஒரு பகுதியை ஏற்று ஓரளவு காரியங்களைச் செய்ய முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த லாட்டரியிலிருந்து வருகின்ற வருவாயையாவது இந்த ஆஸ்பத்திரிக்குக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த லாட்டரியைத்தான் பெரிதும் எதிர்பார்த்து இந்த இலாக்காவை ஏற்றுக் கொண்டேன். ஆனால், அந்த லாட்டரியே 'லாட்டரி' அடித்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், 'டிபென்ஸ் பண்டு' முதலிய பல்வேறு காரியங்களுக்கு அந்த நிதி சென்று விடுகிற காரணத்தால் அந்த வகையிலே நிதி கிடைக்கவில்லை. அப்படிக் கிடைத்தாலும், மாவட்டத்திற்கு இரண்டு லட்சம், மூன்று லட்சம் கிடைக்கிறபோது, அதைப் பங்கிட்டால் ஒரு வட்டத்திற்கு 50 ஆயிரம், 60 ஆயிரம் ரூபாய் கூட வராது. ஆனால், மருத்துவமனை முறையாகக் கட்ட வேண்டுமானால் 5 லட்சத்திலிருந்து 10 லட்சம் ரூபாய் வரை தேவைப்படுகிறது.

Free air in General Hospital

* 230 Q.—THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the free air in the General Hospital is polluted by the smoke from the Railway Engines in the Central Station; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருப்பூருக்கு மேலும் ஈ.எஸ்.ஐ. மருந்தகம்

* 231 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் E. S. I. திட்டத்தின் கீழ் கூடுதலாக ஓர் மருந்தகம் அமைத்துத் தரவேண்டும் என கேட்டு திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் 1971, ஏப்ரலில் விண்ணப்பித்துள்ளாரா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) அங்கத்தினர் கொடுத்துள்ள விண்ணப்பம் சுகாதார-குடும்ப நலத்துறை இயக்குநரின் பரிசிலனையில் இருந்து வருகிறது.